# காணாமல் போன காந்தி

சமூக நல விரும்பிகள், அறிஞர்கள், ஆய்வாளர்கள், விஞ்ஞானிகள், கல்வியாளர்கள், பொருளாதார வல்லுனர்கள், உற்பத்தியாளர்கள், அரசியல் விமர்சகர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், அரசியல்வாதிகள், சிந்தனையாளர்கள் ஆகியோர் அவ்வப்போது நடைபெறும் நிகழ்வுகள் குறித்து தமது கருத்துகளை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளும் பகுதி இது. ஞாயிறு தோறும் வெளிவரும்.

## உரத்த சிந்தனை

- எம்.எல்.ராஜேஷ் -

சமூக நல விரும்பி



சிரவணன், அரிச்சந்திரன், ராமன் - இந்த புண்ணிய புருஷர்கள் தான், காந்திஜியின் புனிதப் பண்புகளுக்கு அடித்தளம் இட்டவர்கள். உலகத்திற்கே உன்னத அகிம்சை கொள்கையை உணர்த்திய காந்திஜிக்கு, சிறு வயதில் பேய், பிசாசு என்றால் அதிக பயம். அவரின் வீட்டில் வேலைக்காரியாக இருந்த ரம்பா என்ற பெண், அவரின் பயத்தைப் போக்க, ராமநாமம் போதித்தாள்.

'தாய், தந்தைக்கு மேல் உலகமே இல்லை; அவர்களை போற்றிப் பாதுகாப்பதே, தன் உயரிய கடமை' என்று வாழ்ந்த சிரவணன், தன் பெற்றோரின் புனித யாத்திரைக்காக, அவர்களை காவடி கட்டித் தூக்கிச் சென்றான்.

'ஒரு பொய் சொல்; இந்த நாட்டையே உனக்கு தருகிறேன்' என, விசுவாமித்திரர் வலியுறுத்தியும், 'பொய்யே பேச மாட்டேன்' என்று, உலக கஷ்டங்கள் அனைத்தையும் அனுபவித்தவர் அரிச்சந்திரன்.

அத்தகைய உதாரண மகான்களின் உன்னத வாழ்க்கையை, தன் இளம் வயதில் கற்ற காந்திஜி, உலகத்தையே தன் அன்பால், அகிம்சையால் கவர்ந்தவர். அது போல, இந்த நவீன யுகத்தின் இளம் தலைமுறையினருக்கு, காந்திஜியின் அருமை, பெருமைகளைக் கற்றுக் கொடுப்பதன் மூலம், புதிய சமுதாயத்தைப் படைக்கலாம்.

ஒரு நாடு, தன் தலைவருக்கு அஞ்சல் தலை வெளியிடுவது, சிலை வைப்பது, நாணயம் வெளியிடுவது என்பது, மிகப்பெரிய விஷயம். சொந்த நாட்டின் கவுரவத்தைப் பெறுவதற்கு அந்தத் தலைவர், அந்த அளவிற்கு மக்கள் அபிமானத்தையும், அன்பையும் பெற்றிருக்க வேண்டும்.

சொந்த நாட்டில், ஒருவருக்கு இத்தகைய கவுரவம் கிடைப்பது ஒன்றும் பெரிய விஷயமில்லை தான். ஆனால், அந்த தலைவருக்கு பிற நாடுகளும் அஞ்சல் தலை, நாணயம் வெளியிட்டு கவுரவப்படுத்துவது பெரும்பாலும் இயல்பாக நடப்பதில்லை. அதிசயம் போல, எப்போதாவது ஒரு முறை தான் நடக்கும்.

அஞ்சல் தலை, சிலை, நாணயம் மற்றும் பல்வேறு நினைவுப் பொருட்களின் மூலமாக 100க்கும் மேற்பட்ட நாடுகள், ஒருவரைக் கவுரவப்படுத்தி இருக்கின்றன என்றால், அந்த மனிதர் எந்த அளவிற்கு உலக நாட்டு மக்களின் மனதில் போற்றக்கூடிய, வணங்கக்கூடிய மனிதராக இருப்பார் என்பதை, நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அத்தகைய பெருமைக்குச் சொந்தக்காரர், மனித தெய்வம் காந்திஜி.

அகிம்சை எனும் ஆயுதத்தால், உலகையே வெல்லலாம் என்று உலகிற்கு உணர்த்தி, வென்றும் காட்டி, இன்று உலக அமைதியின் சின்னமாகப் போற்றப்படும், நம் தேசத்தந்தையின் சிந்தனைகளான அன்பு, அகிம்சை, சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவைகளை அனைவரும், குறிப்பாக இளைய தலைமுறையினர் பின்பற்றினாலே, உலகம் அமைதிப்பூங்காவாக மாறும்.

நம் தேசத்தந்தை காந்திஜியை, உலக நாடுகள் எந்த அளவுக்கு போற்றியுள்ளன என்பதற்கு, சில உதாரணங்கள்:

- உலக நாடுகளில் அன்டிகுவா முதல், ஜாம்பியா வரை, 120க்கும் மேற்பட்ட நாடுகள், காந்திஜிக்கு அஞ்சல் தலைகளை வெளியிட்டு கவுரவப்படுத்தியுள்ளன; உலகில் எந்த நாட்டுத் தலைவருக்கும் கிடைக்காத அரிய பெருமை இது!
- இந்தியா தவிர்த்து, மற்ற உலக நாடுகளில் காந்திஜிக்கு வெளியிடப்பட்ட அஞ்சல் தலைகளின் எண்ணிக்கை, 300க்கும் மேல்.
- பிரிட்டிஷ் அரசு, பொதுவாக தன் நாட்டுத் தலைவரைத் தவிர்த்து, வேறு நாட்டுத் தலைவருக்கு அஞ்சல் தலைகளை, 1969ம் ஆண்டுக்கு முன் வெளியிட்டதில்லை. அத்தகைய நிலைப்பாட்டை முதல் முறையாக மாற்றி, காந்திஜிக்காக அஞ்சல் தலையை, அந்த நாடு வெளியிட்டது. பிரிட்டன் அரசின் அஞ்சல் தலைகளில் இடம் பெற்ற, முதல் உலகத் தலைவர் நம் காந்திஜி தான்.
- காந்திஜியின் பிறந்த நாளான அக்., 2ம் தேதியை, 2007ம் ஆண்டு ஜூன் 15ம் தேதி, ஐக்கிய நாடுகள் பொதுச் சபை, சர்வதேச அகிம்சை தினமாக அறிவித்து, அவரின் பெருமைக்கு மேலும் பெருமை சேர்த்தது.
- காந்திஜிக்கு இந்தியா மட்டுமில்லாது, 70க்கும் மேற்பட்ட நாடுகள், தம் நாட்டின் முக்கிய இடங்களில் சிலைகளை நிறுவி, அழகு பார்த்துள்ளன.
- இந்தியாவுக்கு அடுத்தப்படியாக, அமெரிக்காவில் தான், காந்திஜிக்கு ஏராளமான அளவில் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் எண்ணிக்கை, 40ஐத் தாண்டும். இதில், குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், காந்திஜி தன் வாழ்நாளில், ஒரு முறை கூட அமெரிக்கா சென்றதில்லை.
- பத்துக்கும் மேற்பட்ட நாடுகள், காந்திஜியின் உருவம் பொறித்த நினைவு நாணயங்களை வெளியிட்டு அவரைக் கவுரவப்படுத்தியுள்ளன.

இது போன்று பல விதங்களில் காந்திஜியை நினைவுக்கூர்ந்து, உலகமே அவரின் கருத்துகளையும், சிந்தனைகளையும் பின்பற்ற முயன்று கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில், நம் இளைஞர் சமுதாயம், தேசத்தந்தையை மறந்து வரும் நிலை காணப்படுகிறது.

கடந்த, 1996ம் ஆண்டு முதல், இப்போது வரை அனைத்து, இந்திய ரூபாய் நோட்டுகளிலும் நிரந்தரமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார் காந்திஜி. இந்த செயலை, நம் இந்திய அரசும், ரிசர்வ் வங்கியும் செய்யாமல் விட்டிருந்தால், நீண்ட காலத்திற்கு முன்பே, நம்மால் காந்திஜி மறக்கடிக்கப் பட்டிருப்பார்.

நம் இந்திய இளம் தலைமுறையினருக்கு காந்திஜியின் பெருமையையும், புகழையும் கொண்டு சேர்க்கும் விதத்தில், எளிய முறையில் அவரின் வரலாறு, அவர் பற்றிய தகவல்கள் சென்று சேர வேண்டும். அத்தகைய செயல்பாடுகள், வெறுமனே காந்திஜியின் சிந்தனைகளைப் பரப்புவதாக அமைந்துவிடாமல், அதை அனைவரும் பின்பற்றும் வகையில் இருக்க வேண்டும்.

காந்தியச் சிந்தனைகளை பிரபலப்படுத்தும் வழிகளை மேம்படுத்த வேண்டும் என்பதும், அவை, வெகு எளிமையாக குழந்தைகளிடம் சென்றடைய வேண்டும் என்பதும் தான், இப்போதைய முக்கியமான தேவை.

அதற்காக, காந்திஜியின் பிறந்த தினம் அல்லது நினைவு நாட்களில் மட்டும், அவரை நினைவு கூர்ந்து போட்டிகள், சொற்பொழிவுகள் நடத்தி பிரபலப்படுத்துவது மட்டும் போதாது. மாறாக, காந்திஜியின் அரிய கருத்துகள், உடனடியாக உலகிற்கு தேவை என்பதை உணர்ந்து, ஒவ்வொரு செயல்பாடுகளிலும் காந்திஜியை முன்னிறுத்தி, அவரின் கருத்துகளை பரவலாக்க வேண்டும்.

மாணவர்கள் மத்தியில் காந்திய சிந்தனைகள் எளிமையாகச் சென்றடைய, அவரை ஒரு நட்சத்திரமாக காட்ட வேண்டும். பள்ளிக் குழந்தைகளிடம் இருந்து இந்தப் பணி துவக்கப்பட வேண்டும். சினிமா நட்சத்திரங்களும், விளையாட்டு வீரர்களும் எந்த அளவுக்கு குழந்தைகள் மனதில் இடம் பெறுகின்றனரோ, அந்த அளவுக்கு நம் தேசத்தந்தை காந்திஜியும் இடம் பெற வேண்டும்.

பல ஐரோப்பிய நாடுகள் தங்களின் டெலிபோன் கார்டு மற்றும் சிம்கார்டுகளின் அட்டையில், காந்திஜியின் படங்களை அச்சிட்டு வரும் வேளையில், நம் நாட்டின் நிலையோ வேறு விதமாக உள்ளது.

மக்கள், குறிப்பாக இளைஞர்கள் அதிகம் பயன்படுத்துபவைகளில், இது போன்ற சினிமா நட்சத்திரங்கள் மற்றும் மாடல்களின் படங்கள் இடம் பெறுகின்றன.

கரன்சியில் மட்டும் காந்திஜி போதும் என நினைத்துவிட்டனரோ என்னவோ தெரியவில்லை. இது போன்றதொரு நிலை மாற வேண்டும்.

காந்திஜி பற்றி கூறிக் கொண்டே செல்லலாம். அவரைப்பற்றி அறியப்பட வேண்டியது அதிகம் இருக்கிறது. அவர் போன்றதொரு அதிசய மனிதரை, இந்த உலகம் எப்போதாவது தான் காணும்.

காந்திஜியை நினைவு கூர்ந்து, அவர் வழியைப் பின்பற்றி அமைதியான சமுதாயத்தைப் படைப்போம். அகிம்சை, அன்பு, அமைதி, சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவை நிறைந்த புதியதொரு உலகை நிர்மாணிப்போம்.

Email: mlrajesh@gandhiworld.in